காமராசர் விதிக்கும் புதிய வரி!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆடி 14உ வியாழன் (29—7—54) வெளியூர்: ஆடி 15உ வெள்ளி (30-7-54)	மலர்: 2 இதழ்: 39

தோட்ட முதலாளிகளின் சுரண்டலுக்கு வேட்டு!

காப்பி, தேயிலை, ரப்பர்

விவசாய வருமானங்களுக்கு வரிவிதிப்பு

25,000 ரூபாய்க்கதிகமான வருமானம் உடையவர்களுக்கு உபரி வரி

சென்னை, ஜூலை 28—

சென்னை மாநிலத்தில் உள்ள தோட்டங்களுக்கு விவசாய வருமான வரி விதிப்பதற்கான மசோதா ஒன்றை சென்னை சர்க்கார் வெளியிட்டுள்ளனர்.

காப்பி, தேயிலை, ரப்பர், சின்கோனா, ஏலக்காய் போன்ற தோட்டப் பயிர் விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானங்களுக்கு வருமான வரி விதிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய தோட்ட விவசாய வருமான வரி 1954-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து விதிக்கப்படும் எனத் தெரிகிறது.

விவசாய வருமான வரி விதிப்பு பற்றி, நீண்ட காலமாகவே சென்னை அரசாங்கம் யோசித்து வந்திருக்கிறது. சில வருமான வரிச் சீர்திருத்தக் குழுவும், வேறு பல சீர்திருத்தங்களுடன் தோட்ட விவசாய வருமான வரி விதிப்பையும் சிபார்சு செய்துள்ளது.

விவசாய வருமானத்தில் வரி விதிப்பது, நியாயமானதும் முன்னேற்றமானதும், பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டதுமான ஒரு வரி விதிப்பாகும். அதன்படியே இப்போது தோட்டங்களுக்கு மட்டும் விவசாய வருமானத்தின்மீது வரி விதிக்கப்படுகிறது.

சாதாரண விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரும் போது, இந்த விவசாய வருமான வரி விதிப்பு, எல்லாப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும்.

ரூ 3,000-க்குக் குறையாத வருமானமுடையவர்களுக்கும் கூட்டுக் குடும்பங்களாயிருக்கும் விவசாயிகள் விஷயத்தில் ரூ. 6,000-க்குக் குறையாத வருமானமுடையவர்களுக்கும் இந்த விவசாய வருமான வரி விதிக்கப்படும்.

ரூ 25000 க்கு அதிகமான வருமானமுடையவர்களுக்கு, உபரி வரியும் விதிக்கப்படும்.

வரி விதிப்பிற்காகக் கணக்கிடப்படும் வருமானத்தில், பயிரிடும் செலவு, நிலவரி அல்லது குத்தகை வாரம் இவைகள் நீக்கப்பட்டு எஞ்சியுள்ள வருமானத்திற்கே வரி விதிப்பு இருக்கும்.

இந்த விவசாய வரி விதிப்பு திரு—கொச்சி விவசாய வருமான வரிச் சட்டம், மத்திய அரசாங்க வருமான வரிச் சட்டம் ஆகியவற்றை ஒத்ததாக இருக்கிறது.

இந்த வரி விதிப்பு சம்பந்தப்பட்ட சட்டப் பிரச்னைகளை உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு அனுப்புவதற்கான வழிவகையும், சட்டத்தில் இடம் பெறும்.

விவசாய வருமான வரி விகிதம் கீழ்க்கண்டவாறு இருக்கும்.

(1) மொத்த விவசாய வருமானத்தில் முதல் 1500 ரூபாய்க்கு வரி விதிப்பு இல்லை.

(2) அடுத்த 3500 ரூபாய்க்கு ஒரு ரூபாயில் ஒன்பது பைசா.

(3) அடுத்த ரூ. 5000-க்கு ரூபாயில் ஒன்றரை அணா.

(4) அதற்கடுத்த 5000 ரூபாய்க்கு ரூபாயில் இரண்டரை அணா.

(5) அதற்கடுத்த 5000 ரூபாய்க்கு ரூபாயில் மூன்றரை அணா.

(6) மொத்த வருமானத்தில் எஞ்சிய ரூபாயில், ரூபாய்க்கு நான்கு அணா.

25 000-க்கும் அதிகமான வருமானமுடையவர்களுக்கு விதிக்கப்படும் உபரி வரி ரூபாயில் அரை அணா முதல் ஆறு அணா வரை விகிதமுடையதாயிருக்கும்.

அறிவு வளர்ச்சி புதிய முறைகளை உருவாக்கும்!

அறிவுவளர சிந்தனை தேவை!

சிந்திக்க துணிவும் தெளிவும் தேவை!

அறிவு வளர்ச்சி மன்ற ஆண்டு விழாவில் சம்பத்

"அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்பதை மதவாதிகூட ஒத்துக் கொள்ளத்தான் செய்கிறான். மனிதனின் அறிவு மிக உயர்தரமானது என்பதையும் ஏற்றுக் கொள்கிறான்."

"மனிதன் மதிக்கப்படுவதெல்லாம் அவனது ஆற்றலுக்காகவா? சிங்கத்திற்கும், புலிக்கும், யானைக்கும் இல்லாத ஆற்றலா தனி மனிதனிடம் இருக்கிறது? மனிதனுக்குள்ள நிலைமைகளைச் சமாளிக்கும் அறிவுதான் சிங்கத்தையும், புலியையும், யானையையும், இன்ன பிற இருந்து மறைந்து போய்விட்ட பயங்கர மிருகங்களையும் அடக்கி ஆளும் திறனை அவனுக்குத் தந்தது. மனிதனின் அந்தப் பகுத்தறிவுதான் மனிதனுக்குச் சிறப்பைத் தருகிறது.

"அந்தப் பகுத்தறிவு வளர்ச்சியின் வரலாறு மிகமிக நீண்டதாகும். அந்த அறிவு வளர வளர மனிதனின் சிறப்பும் வாழ்வும் ஓங்குகின்றன."

'அறிவு' எப்படி வளர்கிறது? மனிதனின் சிந்தனைக்குத் தக்கவாறுதானே அறிவு வளர்ச்சி இருக்கும். சிந்தனை புதிய, புதிய அனுபவங்களால் அவனுக்கு ஏற்படுகிறது, புதிய அனுபவங்களை மேற்கொண்டு சிந்திக்க, மனிதனுக்கு துணிவும் தெளிவும் துணை நிற்க வேண்டும்.

"இந்த அறிவு வளர்ச்சிக்குத் தக்கவாறுதான் அவனுக்கு வாழ்வில் சுகம் கிடைக்கிறது."

—என்று, தோழர் ஈ. வெ. கி. சம்பத், ஆயிரம்விளக்கு அறிவு வளர்ச்சி மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:—

சென்னை அறிவு வளர்ச்சி மன்றத்தார் தாங்கள் செய்கிற பணி குறித்து அறிக்கை வாசித்தார்கள். அவர்கள் நடத்துகிற இரவுப் பள்ளி, நூலகம், நூல் நிலையம், பல்வேறு பொருள் பற்றிய விவாதங்கள் இவை எல்லாம், இத்தப்பகுதி மக்களினுடைய, விழிப்புணர்வுக்குத் தேவையானது என்று அறிகிறோம்.

இப்படி பலப்பல அறிவு வளர்ச்சி மன்றங்கள் நாட்டிலே இயங்கி வருகின்றன, பல்வேறு பெயர்களிலே. இன்று வளர்ந்துள்ள நிலையில் நாங்கள் எல்லாம், ஒரு கட்டுரை படிப்பது போன்று, ஆர அமரப் பேசுகிறோம். ஆனால், எனக்கு முன் பேசிய அண்ணன் பொன்னம்பலனார் அவர்கள் பேச்சு 'போட் மெயில்' வேகத்தில் இருந்ததைக் கண்டீர்கள்; இதற்கு ஒரு காரணம் உண்டு. அவரது சொற்பொழிவை, ஆரவாரத்துடனும், மகிழ்ச்சிப் பெருக்குடனும், எக்களிப்புடனும் கேட்டுக் கொண்டிருந்தீர்கள் ஆனால், இன்றைக்கு இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் அவர்களும், அவர்களுடனிருந்த தோழர்களும், இன்று அவர் உங்களிடையே வெளியிட்ட கருத்

வருந்துகிறோம்

"நம் நாடு" இதழின் உதவி ஆசிரியர் தோழர் காஞ்சி கல்யாண சுந்தரம் அவர்களின் ஒரே மகனும், காஞ்சீபுரம் திருவாளர் பச்சையப்ப முதலியார் அவர்களின் மருமகனுமான தோழர் அருணாசலம் (ராமு) அவர்கள் சின்னாட்களாக 'டைபாய்ட்' ஜுரத்தினால் உடல் நலக் குறைவாக இருந்து நேற்று (28-7-54) பகல் ஒன்றரை மணிக்கு காலமானார் என்ற செய்தி கேட்டு திடுக்கிட்டோம்—தாங்கொணா துயரமடைந்தோம். தோழர் அருணாசலத்துக்கு வயது 22.

தனயனை இழந்த தவிக்கும் தந்தைக்கும் மற்றோருக்கும் நம் வருத்தத்தையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்

★

சென்னை, ஜூலை 29—

சென்னை, ஆயிரம் விளக்கு அறிவு வளர்ச்சி மன்றத்தின் சார்பில் கடந்த 27—7—54 மாலை ஆண்டு விழாப் பொதுக் கூட்டம் மன்றச் செயலாளர் கிருட்டிணசாமி தலைமையில் நடைபெற்றது. புலவர் நன்னன் உரையாற்றினார். அடுத்து தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் அறிவு வளர்ச்சி இந்த நாட்டில் எத்தனை அவசியமானது என்பதை விளக்கிப் பேசினார்.

பின்னர் மன்றச் செயலாளர் கடந்த ஓராண்டில் மன்றம் செய்துள்ள பணிகளை விளக்கி ஆண்டு அறிக்கை வாசித்தார். இறுதியாக தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

துக்களை வெளியிடுவதற்கு பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. கருத்துக்களை எப்படியாவது, என்ன கஷ்டப்பட்டாவது சொல்லிவிடுவது என்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பயிற்சி—அதுதான் அந்தப் பேச்சின் வேகம்.

அன்று, கருத்துக்களைச் சொன்னவர்களைத் தவிர கேட்டுக்கொண்டிருந்தவர்கள் எதிர்த்தார்கள். பட்டம் பெற்றவர்கள் படித்தவர்கள், பதவி

(4-ம் பக்கம் பார்க்க)

பிரெஞ்சு ஆதிக்கத்தின் மரண ஓலம்!

(தந்திச் செய்தி)

புதுச்சேரி தி. மு. கழகத்தைச் சேர்ந்த பன்னிரண்டு தோழர்கள் பிரெஞ்சு ஏகாதிபத்திய வாதிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சூயஸ்: பிரிட்டன்-எகிப்திய ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு!

'இராணுவத் தளங்கள் தேவை' என டோரிக் கட்சியினர் போர்க் கூச்சல்!

ஈடனுக்கு சீட்டுக் கிழியும்?

லண்டன், ஜூலை 27—

சூயஸ் கால்வாய் பகுதியிலிருந்து வெள்ளைத் துருப்புகள் இன்னும் இருபது மாதங்களுக்குள் வெளியேற வேண்டும் எனும் ஒப்பந்தம் பிரிட்டனுக்கும்—எகிப்துக்கும் இடையே ஏற்பட்டுள்ளது என்ற செய்தி வெளியாயிற்றல்லவா?

அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து ஓட்டளிக்க பிரிட்டனில் ஆட்சிபீடத்திலிருக்கும் 'கன்சர்வேட்டிவ் கட்சியினரின் 'புரட்சி'கர அங்கத்தினர்கள் முடிவு செய்துள்ளனராம்.

அவர்களின் இந்த முடிவுப்படி அவர்கள் ஒப்பந்தத்தை எதிர்த்து முறியடித்துவிட்டால், முதன் மந்திரியாயிருக்கும் சர்ச்சில் ராஜினாமாச் செய்யவேண்டியதில்லை என்றும், மாறாக, வெளிநாட்டிலாகா மந்திரியாயிருக்கும் அந்தோணி ஈடன் தான் ராஜினாமாச் செய்யவேண்டுமென்றும் அவர்கள் கூறுகின்றனராம்.

தொழிற் கட்சியினர் ஒப்பந்தத்தை ஆதரித்த போதிலும் அக்கட்சியிலிருந்தும் சிலர் ஒப்பந்தத்தை எதிர்த்து ஓட்டளிக்க முன்வரக் கூடும் என 'கன்சர்வேட்டிவ்' கட்சியினர், கருதுகின்றனராம்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 29—7—54 வியாழன்

நாடக 'பாணி'!

'பூங்கொடியே! புவன சுந்தரி! தத்தை மொழியாளே! சித்தமதில் குடிகொண்ட சிங்காரி! உன்னைக் காணவிட்டால், கண் புண்ணாகிறது! கருத்திலே, சோகப் புயல் உண்டாகிறது!"

"குணாளா! என் நிலைமை மட்டுமென்ன! உடலே வேகும் கடலாகிறது. உமது காதலைப் பெற்ற நான், உலகிலே எந்த அணங்கும் பெற முடியாத பேறு பெற்றவளல்லவா!"

"பெண்கட்கரசே! உலகமே எதிர்த்தாலும், ஆழ்கடலில் என்னைத் தள்ளினாலும், தீக்குழியில் போட்டாலும், பாகு மொழியாளாய்! நான் அஞ்சேன்! உடலில் உயிர் இருக்கும் வரையில், போராடுவேன். உன்னை இழக்கச் சம்மதியேன். இது உறுதி. இது சத்தியம். உன் கமலக் கண்களிலே, பவழ இதழிலே, முத்துப் பற்களிலே, ரோஜா நிறக் கன்னத்திலே, விற்புருவத்திலே, கார்நிறக் கூந்தலிலே நான்,......"

"கண்ணாளா! நான் தாங்கமாட்டேன் இவ்வளவு புகழுரைகளை......"

"புகழுரையா! புன்னகையால் என்னை வென்ற பேசும் பொற் சித்திரமே! புகழுரை அல்ல! புகழுரை அல்ல! உண்மையை உரைத்தேன்—உள்ளத்திலே ஊற்றெடுத்துக் கிளம்பும் காதலைப் பொழிந்தேன். கட்டழகி! என்னை நீ அறியாயா! இந்தப் பார்வையும் பெருமூச்சும், பேச்சும் போக்கும், உனக்கு, என் நிலைமையை எடுத்துக் காட்டவில்லையா!"

"ஸ்வாமி! நான் பாக்யசாலி!"

"ப்ரியே! நான் பாக்யவான்!"

"அன்பரே! இருவரும் இன்ப லோக வாசிகளாவோம்!"

★

பலத்த 'கரகோஷம்.' வயோதிகர்கள் பழைய நாட்களை எண்ணிப் பரவசப்படுகிறார்கள். வாலிபர்கள், துள்ளிக் குதிக்கிறார்கள். காதலர்கள் கண்ணோடு கண் பேசிக் களிப்படைகிறார்கள். கொட்டகையே குதூகலத்தில் மிதக்கிறது. நாடகக் குழுவினர் மகிழ்கிறார்கள்.

"பெரிய குணவதி என்று மனதிலே எண்ணம்! அசடு வழியும் முகம், ஆமை நடை, ஒளி போன கண்கள், ஒட்டு முடி, பொய்ப் பல், இவளுடன் நான் காதல் நடத்த வேண்டி இருக்கிறது, காதல்!

போலைதக்காரன்-நரைமயிர் கருக்கும் தைலம் பூசி நாற்பத்தெட்டு வயதை இருபத்தைந்தாக்கும் பகட்டுக்காரன், தொந்தி தெரியாதிருக்க, கட்டுகளும் ஒட்டுகளும் போட்டுக் கொண்டு, மார்பட்டையும் தோள்பட்டையும் கட்டிக் கொண்டு, வந்து நிற்கிறான், அருகே செல்லுமுன் குடலைப் புரட்டுகிறது, இவனைப்போய் இந்திரனே! சந்திரனே! இன்னுயிரே! பிராணபதே! என்றெல்லாம் கொஞ்சிக் குலாவ வேண்டி இருக்கிறது கொடுமை, கொடுமை!

திரைக்குப் பின்னாலே ராஜபார்ட்—ராணிபார்ட்—பேச்சு இவ்விதமாகிவிடுகிறது.

நாடக மேடையிலே காதல் மொழியும் நடிகர்கள், திரை மறைவிலே, ஒருவரை ஒருவர் வெறுத்துக் கொள்வதும், கேலி பேசிக் கொள்வதும், கேவலப்படுத்திக் கொள்வதும் உண்டு. ரசிகர்கள் மேடையிலே அவர்கள் பேசிய காதல் மொழி கேட்டுக் களிப்பர்—ஆனால், அவர்களைக் களிப்படையச்செய்வது நாடக வெற்றிக்கு அவசியம் என்பதால், அழகாக நடித்து அற்புதமாகப் பேசி, இனிமையாகப் பாடிப் புகழ் தேடும் நடிகர்களிடம், திரைக்குப் பின்னால், உண்மை வடிவுடன் உலவும்போது, பகையும் புகையும் மட்டும்.

ஜாதிகள் ஒழிக்கப்பட்டாக வேண்டும்! சமூகத்தில் உயர் ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று பிரிவு இருப்பது கொடுமை மட்டுமல்ல, சமூகத்தையே அது நாசமாக்குகிறது. ஜாதி ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று நேரு பண்டிதர், ஆஜ்மீர் கூட்டமொன்றில் முழக்கமிட்டார். அறிவுடைமையும், ஆண்மையும் பண்டிதர் உருவில்! என்று கேட்போர் பரவசமடைந்திருப்பர்.

கொடுமைக்கு ஆளான பழங்குடி வகுப்பினரான, ஜகஜீவன்ராம் இந்த மார்க்கத்திலே உள்ள ஜாதீயம் எனும் பேயுணர்ச்சியைப் பலமாகத் தாக்கினர்—இந்தக் கேவலத்தைக் கழுவிக் கொள்ளாமல், இருண்டவ யாத்திரிகளைக் கண்டிக்க முன்வந்து விட்டார்கள், இந்த கனவான்கள்! என்று இடித்துரைத்திருக்கிறார். அவருடைய வீரத்தையும் கேட்போர் பாராட்டினர்.

சமான கட்டத்தைக் கண்டு களிப்படைந்தவர்கள், கொட்டகை அதிரக் 'கரகோஷம்' செய்வது போல, இத்தகைய புரட்சிக் கருத்துரைகளைப் பேசிடும் தலைவர்களை, கேட்போர், பாராட்டுதலைச் செய்வர்—வாழ்த்துவர்—வணங்குவர்.

ஆனால், திரைக்குப் பிறகு, காதல் மொழி உண்டா!

மேடைப் பேச்சு, நாட்டின் நடவடிக்கையிலே, எந்த அளவுக்குப் பயன்படுகிறது? அதை எண்ணும்போதுதான் பெருமூச்செறிய வேண்டி வருகிறது.

ஜாதி ஒழியத்தான் வேண்டும் என்று முழக்கமிடும் நேரு பண்டிதர் அவருக்கு மக்கள் அளித்துள்ள மகத்தான செல்வாக்கைக்கொண்டு, ஜாதியை ஒழிப்பதற்காக, என்ன பணியாற்றி வருகிறார், என்ன திட்டம் தந்திருக்கிறார்? ஜாதிப் பித்தத்தை ஊட்டி, ஏய்த்துப் பிழைக்கும் எத்தர்களின் கொட்டத்தை அடக்க முன்வருகிறாரா? ஜாதி உணர்ச்சியை இரத்தத்துடன் கலக்கும் வகையான, எண்ணங்களை, ஏற்பாடுகளை அழித்தொழிக்க, யாது செய்தார்? ஜாதி வெறிக்கு விளைநிலமாக உள்ள புராண இதிகாச போதனைகளைத் தடுத்தாரா? பொய்யுரை கூறிடும் புரட்டர்கள், பாமர மக்களின் மதியை மயக்கி, ஜாதி உணர்ச்சியைத் தூண்டிவிட்டு சுரண்டிப் பிழைப்பதை எதிர்த்தாரா? இல்லை! இல்லை! நாடக மேடைக் காதலன் போல், பேசுகிறார்!

ஜாதி ஒழிக்கப்பட்டாக வேண்டும், என்று முழக்கமிடுகிற நேரு பண்டிதர், ஜாதியையே அடிப்படையாகக் கொண்ட வர்ணாஸ்ரமக் கொடுமையை வளர்த்துவிட உதவும் இராமாயணத்துக்கு முன்னுரை தருகிறார், அன்புரையும் புகழுரையும் சொரிகிறார்! கும்பமேளா செய்கிறார்! குங்குமம் தரும் வைதீகர்களிடம் குலாவவும் செய்கிறார்! ஜாதி எப்படி ஒழியும்! எல்லாம் நாடக மேடை பாணியாக இருக்கிறதே தவிர, செயலாற்றும் முறையாகக் காணோம். இடத்துக்கும் நேரத்துக்கும் தக்கபடி பேசி 'கரகோஷம்' பெற்றுக் களிப்படைந்து, புகழ் நாடி அலையும் பெரும் பயணத்திலிருக்கிறார் பண்டிதர்! ஜாதியை ஒழிக்கும் அறப்போரில் ஈடுபட மறுக்கிறார்! பேச்சிலே, புரட்சி துள்ளுகிறது, புதுமை மணம் வீசுகிறது, செயலோ, பழமையின் பாதுகாவலருக்கு ஆக்கம் அளிப்பதாக இருக்கிறது.

பணத்தைக் கரைத்திட மட்டுமே பயன்படும் ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டி, ஆனந்தத் தாண்டவமாடும் பண்டிதர், ஜாதிச் சனியனை விரட்ட ஒரு திட்டம் தீட்டி வேலை செய்ய முன்வர வேண்டும். ஜாதி உணர்ச்சியை ஊட்டும் ஏடுகளைப் பறிமுதல் செய்ய வேண்டும்! ஜாதி உணர்ச்சியை ஊட்டும் ஏற்பாடுகளாக உள்ள சடங்குகள், சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள், புராண இதிகாசங்கள் ஆகியவைகளை ஒழித்துக்கட்ட வேண்டும். முன்வர முடியுமா பண்டிதரால்! சனாதனிகள் சீறி எழுவர், சதிபல புரிவர், சபித்தும் விடுவர், என்று அஞ்சுகிறார்! பேச்சிலே மட்டும் பெரும் வீரம் காட்டி, ஜாதி ஒழிக்கப்பட்டாகவேண்டும், என்று முழக்கமிடுகிறார், ஜாதி ஒழிக்கப்பட்டாகவேண்டும்—ஆம்!—ஆம்!—நாமும் கூறுகிறோம், நாட்டிலே உள்ள நல்லறிவாளர்கள் அனைவருமே கூறத்தான் செய்கிறார்கள்—ஜாதி ஒழிக்கப்படத்தான் வேண்டும்—ஆனால் எப்படி? அதைத்தான் நாம் கேட்கிறோம். பண்டிதரிடம் இதற்கு என்ன திட்டம் இருக்கிறது?

நீர்வாயு குண்டு சோதனை

அமெரிக்கா நஷ்டஈடு தருகிறது

டோக்கியோ, ஜூலை 27—

பிக்னி தீவில் நடத்தப்பட்ட ஹைட்ரஜன் குண்டு சோதனையினால் அபாயம் ஏற்பட்ட ஜப்பானிய மீன் பிடிப்போருக்கு அமெரிக்கா 8 லட்சம் டாலர்கள் நஷ்டஈடு தருவதென்று தீர்மானிக்கிறது.

சோவியத் ராஜதந்திரிகள் மீது நடமாட்டத் தடை!

ருஷ்ய இலக்கியங்களை விற்கவும் தடை

பாக் சர்க்கார் நடவடிக்கை!

கராச்சி, ஜூலை 26—

பாகிஸ்தான் சர்க்கார் கராச்சியில் உள்ள சோவியத் தூதுவராலய ராஜ தந்திரிகள்மீது நடமாட்டத் தடை விதித்திருக்கிறது.

மத்திய அஞ்சல் அலுவலகத்திலிருந்து நகரின் உட்புறத்தில் 35 மைல் தூரத்திற்கு மேல் இவர்கள் செல்லக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இத்தடை பற்றிய விவரங்கள் கராச்சி சோவியத் தூதுவராலயத்தில், பாக்-வெளிநாட்டிலாகாவினர் ஒருவரால் கொடுக்கப்பட்டன என்று தெரிகிறது. மாஸ்கோவில் உள்ள பாக்-தூதுவராலய சிப்பந்திகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைக்குப் பதில் நடவடிக்கையாக இது கருதப்படவேண்டும் என்று தெரிகிறது.

சோவியத் ராஜ தந்திரிகள் பாகிஸ்தானில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

பாதுகாப்பு இலாகா அமைப்புகளுக்குச் செல்லக்கூடாது; சோவியத் இலக்கியங்களை பாகிஸ்தானில் இறக்குமதி செய்யவோ, வினியோகம் செய்யவோ, விற்பனை செய்யவோ கூடாது என்றும் உத்தரவிடப் பட்டிருக்கிறது. பாகிஸ்தான் பொதுமக்களில் யாரையாவது சோவியத் ராஜ தந்திரிகள் சந்திக்க விரும்பினால் முன்கூட்டியே வெளிநாட்டிலாகாவிடம் அனுமதி பெற வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கராச்சியில் சோவியத் தூதுவர் அலெக்சாண்டர் ஸ்டெட் சென்கோவுடன் 13 பேர் உள்ளனர் என்று தெரிகிறது.

பீகிங்கில் உள்ள பாக். தூதுவராலய சிப்பந்திகள் மீது சீன சர்க்கார் விதித்துள்ள கட்டுப்பாடுகள் பற்றி பாகிஸ்தான் வெளிநாட்டிலாகா ஆராய்கிறதாம்.

கராச்சியில் உள்ள சீனத் தூதுவராலயத்தில் மொத்தம் எட்டு பேர் உள்ளனர் என்று தெரிகிறது.

மாநாட்டிலிருந்து இரகசியப் போலீசார் வெளியேற வேண்டும்!

தெ. ஆ. நீதிமன்றத்தின் தீர்ப்பு!

மாநாட்டு நிர்வாகிகள் கோரிக்கையை நிராகரித்த போலீசார் நீதிமன்றத்தால் வெளியேற்றப்பட்டனர்

ஜோகன்ஸ்பர்க், ஜூலை 25—

தென் ஆப்பிரிக்க இந்திய காங்கிரஸ், ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ், ஜனநாயக காங்கிரஸ் ஆகிய கட்சியினர் நடத்தும் 'மக்கள் காங்கிரஸ்' மாநாட்டிற்கு வந்திருந்த இரகசியப்போலீசாரை மாநாட்டின் நிர்வாகிகள் வெளியேறுமாறு கேட்டுக் கொண்டனர். இரகசியப் போலீசார் வெளியேற மறுக்கவே இவர்களை வெளியேறுமாறு உத்திரவிட வேண்டுமென்று தென் ஆப்பிரிக்க உயர்நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதிகள், மக்கள காங்கிரசின் மாநாட்டிலிருந்து வெளியேற வேண்டுமென்று உத்திரவிடப்பட்டது. நீதிபதி பிளாகவெல், விசேஷ அரசியல் போலீஸ் படையின் தலைவர் மேஜர் ஸ்பெஞ்சிலனருக்கு சம்மன் அனுப்பி விசாரணை செய்தார்.

வெளியேறுமாறு கூறியும் போலீசார் வெளியேற மறுப்பது உரிமைகளை மீறுவதாகும் என்று மனுதாரர்கள் சார்பில் வாதாடப்பட்டது.

மாநாட்டின் நடவடிக்கைகளைத் தாங்கள் குறிப்பெடுப்பதாகவும், மாநாட்டிற்கு வெளியே நிற்கும் கார்களின் பதிவு எண்களை எழுதிக் கொள்வதாகவும், இதன் காரணமாகவே இரகசிய போலீசார் மாநாட்டில் இருக்கின்றனர் என்று போலீசார் தரப்பில் வாதாடப்பட்டது.

நீதிபதியின் வெளியேற்ற உத்திரவு, மாநாட்டில் படிக்கப்பட்டது, அங்கே இருந்த மூன்று ஐரோப்பிய இரகசிய போலீசாரும், இரண்டு ஆப்பிரிக்க இரகசிய போலீசாரும் வெளியேறினர்.

தென் ஆப்பிரிக்க நீதி இலாகா அமைச்சர் ஸ்வார்ட், ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் செயலாளர் சிசிலுவை மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடாது என்று உத்திரவிட்டிருக்கிறார்.

ஆந்திராவில் எஃகுத் தொழிற்சாலை

ஆரம்பிக்க சர்க்கார் தீவிரம்

கோட்டகூடம், ஜூலை 27—

ஆந்திராவில் எஃகுத் தொழிற்சாலை ஒன்று அமைப்பது பற்றி சர்க்கார் ஆலோசனை செய்கிறதாம். இச்செய்தியை ஆந்திர நிதி அமைச்சர் விஸ்வநாதம் கூறினார். கோதாவரிச் சம வெளியில் கிடைக்கும் ஏராளமான நிலக்கரி எஃகுத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க உதவுமென்று தான் நம்புவதாக விஸ்வநாதம் மேலும் கூறினார்.

இந்தியப் படத்திற்குப் பரிசு

புதுடில்லி, ஜூலை 27—

செக்கோஸ்லோவேகியாவில் நடைபெற்ற 8-வது உலக திரைப்பட விழாவில் சமூக முன்னேற்றம் பற்றிய படங்களில் இந்தியப் படமான 'தோபி கா ஜமீன்' முதற் பரிசு பெற்றிருக்கிறதாம்.

மும்முனைப் போர் முழக்க நாள் விழா

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கைக்கிணங்க மும்முனைப் போர் முழக்க நாள் விழா நாடெங்கும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அந்த நிகழ்ச்சிகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது :—

★

மதுரை

15—7—54-ல் மும்முனைப் போராட்ட வெற்றி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நகரெங்கும் இயக்கக் கொடிகள் கொண்ட தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, 70-க்கு மேற்பட்ட இடங்களில் புதிய கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டது. மாலை 5 மணி அளவில் நகர் தலைமை நிலையத்திலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு நகரின் பல முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று திலகர் திடலில் வந்து முடிந்தது. நகரிலுள்ள 20-க்கு மேற்பட்ட கிளை கழகங்களும் கலந்துகொண்டு ஊர்வலத்தை சிறப்பித்தன. பொதுக் கூட்டத்திற்கு தோழர் பாலு தலைமை தாங்கினார். தோழர்கள் எஸ். முத்து, எம். அய்யாசாமி, நெல்லை அலிசேக் மன்சூர், வசனப்பித்தன் முதலியோர் பேசினர்.

★

மாரண்டஅள்ளி (சேலம்)

15—7—54-ல், மும்முனைப் போராட்ட விழா, பல இடங்களில் கொடியேற்றியும், திப்பு முழங்கியும் கொண்டாடப்பட்டது. ஊர்வலத்துடன், பொதுக் கூட்டமும், நடைபெற்றது. தோழர் எம். எம். ரங்கநாதன் தலைமை வகித்தார். தோழர்கள் நாராயணசாமி, பசவராசன், மாசி, நீலமேகம், இலக்குமணன் முதலியோர் பேசினர்.

★

சமயநல்லூர்

19—7—54ல் தி. மு. கழக கூட்டம் தோழர் தி. குருசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். ஆர். கணேசன், ஏ கே சாமி, கே. எஸ். சுந்தரம், எஸ். வீரராசன், ஆர். சந்திரன் ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

★

நெடுங்குளம்

15—7—54ல், கழகக் கட்டடத்திற்கு எதிரேயுள்ள மைதானத்தில் மும்முனைப் போராட்ட வெற்றி விழா, கொண்டாடப்பட்டது. தோழர் மாவட்டகுடி டி. விசுவநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள்: எஸ் முனுக்கண்ணு, ஆர். பி சாமி, பி ஜெயராஜ், எ பி முகம்மது இப்ராகிம், டி. பாவலர்சாமி, முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். தோழர் கே. கருப்பையா இசைவிருந்துடன் விழா இனிது கலைந்தது.

★

குருவிக்காம்பை

19—7—54 திங்கட் கிழமை 6 மணிக்கு, குருவிக்காம்பை தி. மு. கழகத்தின் சார்பில் மும்முனைப் போர் முழக்க நாள் பொதுக் கூட்டம் தோழர் பு கிருஷ்ணமூர்த்தி தலைமையில், நடைபெற்றது. தோழர்கள் அடைக்கலம், பி வடிவேலு ஆகியோர் பேசியபின், தோழர் சி பி சிற்றரசு வெற்றி விழாவைப் பற்றி விளக்கிப் பேசினார்.

★

அக்கிசெட்டிபாளையம்

15—7—54 மாலை 6 மணிக்கு செயலாளர் ஏ அண்ணாமலை தலைமையில் ஊர்வலமும், மாரியம்மன் கோவில் முன்பாக பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டது. தோழர்கள் தங்கவேலு நாராயணன், அங்கமுத்து ஆகியோர் பேசினர்.

எடத்தெரு கிளை

கிளைக் கழகத்தின் சார்பாக மும்முனைப் போராட்ட நினைவு நாள் அன்பேப் பிரசுரம் வெளியிட்டு, கொடிக் கம்பங்களில் புதிய கொடிகள் ஏற்றிக் கொண்டாடப்பட்டது.

★

வீரக் கவுண்டனூர் :

15—7—54ல், மும்முனைப் போராட்ட வெற்றிவிழா, கழகக் கட்டடத்தில் கொடியேற்றி கொண்டாடப்பட்டது. பகல் 1½ மணிக்கு, தோழர் ஆறுமுகம் தலைமையில் ஊர்வலம் நடைபெற்று கழகக் கட்டடத்தை வந்தடைந்தது.

★

திண்டுக்கல்

18—7—54ல் தி. மு கழகச் சார்பில் வ. உ. சி திடலில் தோழர் எஸ். இளங்கண்ணன் தலைமையில் மும்முனைப் போர் முழக்கநாள் கொண்டாடப்பட்டது.

கூட்டத் துவக்கத்தில் 7 பேர் கொண்ட தோழர் கே. எம். கனியா அவர்களின் பின்னணிக் குழுவினர் இயக்கப் பாடல்களைப் பாடி மகிழ்வித்தனர்.

அத்தங்குடி தோழர் கே. வி. கே. சாமி அவர்களும் நகரமன்ற உறுப்பினர் தோழர் பி சமதர்மம் அவர்களும் விரிவுரையாற்றினர்.

★

கொண்டயப்பட்டி

15—7—54 வியாழக்கிழமை மாலை 5-30க்கு மும்முனைப் போராட்ட முழக்க நாள் பொதுக் கூட்டமும், ஊர்வலமும் தோழர் க. துரைச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன கூட்டத்தில் தோழர் சி பாலுச்சாமி, பேசினார்

★

குள்ளக்காபாளையம்

15—7—54 மாலை 6 மணிக்கு கழகச் சார்பில் ஓர் ஊர்வலம் புறப்பட்டு சென்றது. மாலை 7 மணிக்குத் தோழர் அ ஆறுமுகம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வெ. வையண்ணன், ஓ. கிருட்டிணசாமி, மை மல்லையன். பெ சவுண்டப்பன் ஆகியோர் பேசினர்

★

வடுகபட்டி

வடுகபட்டி (சோழவந்தான் வட்டம்) தி. மு கழகத்தின் சார்பில், 15—7—54 அன்று மும்முனைப் போர் முழக்க நாள் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் என். அண்ணாசாமி தலைமை வகித்தார். தோழர்கள் வடுகபட்டி இரெ. ஜனார்த்தனம், கோ சுப்பராயன் ஆகியோர் பேசினர்.

★

சூலூர்

18—7—54 காலை 8-30 மணியளவில், ஆங்காங்கு பல்வேறு இடங்களில் கழகக் கொடிகளை ஏற்றுவிக்கப்பட்டன. கழகக் கட்டடத்திலிருந்து அண்ணா படத்துடன் ஓர் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று கழகக் கட்டடம் வந்தடைந்தது. கோவை நகரச் செயலாளர் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சண்முகசுந்தரம், சீனிவாசன், ஆறுமுகம், ஊமைத்துரை, என். என். அர்ப்புதசாமி ஆகியோர் விரிவுரையாற்றினார்கள்.

பம்பாய்

பம்பாய் தி. மு கழக ஆதரவில் 15—7—54 அன்று மாலை கட்டவாடி குடியரசு நிலையத்தில் மும்முனைப் போராட்ட நினைவு நாள் தோழர் எஸ் தியாகராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திராவிடப் பண் பாடிய பின்னர் தோழர்கள் ம இரா. ஒ ரெத்தினசாமி, இரா. வடவை குயில், பி எஸ். செல்லையா, எஸ். எஸ். செழியன், எஸ். வள்ளிநாயகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

★

பம்பாய்—பொய்சேர்

ஜூலை 15-ம் நாளன்று பொய்சேர் தி மு. கழகப் பணிமனையில் மாலை 6-30 மணியளவில் மும்முனை போராட்ட முழக்க விழா : தோழர் வி. எஸ் பொன்னையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. ரா: ஆதிவீரன், எஸ். எஸ். முத்தையா, ஆ. ராமசாமி, கே. எஸ். சுப்பையா, கே. எஸ் எஸ். ராஜா, அ சே. அருணாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

★

ஆமதாபாத்

25—7—54ல், ஆமதாபாத் கர்வடா ரோட் (3) வட்டக்கிளையின் சார்பில் மும்முனை போராட்ட வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. தோழர் அ பரம தலைமையில், பி வி. ராமசாமி, இரா கிருஷ்ணமூர்த்தி, இரா நடராஜன், புரட்சிமாறன், ச. சண்முகநாதன், ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

★

நடப் பாய் கிளை (நீலகிரி)

15—7—54 அன்று கழகச் சார்பில் தோழர் மு ராமையா தலைமையில் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் எஸ் மோகன், கே. கணபதி, பி ஜி. நாராயண, புரட்சிமணி, ஆகியவர்கள் பேசினர். சிறார்களுக்கு இனிப்பும், தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது.

★

காடுகொண்டபள்ளி

17—7—54-ல், பெங்களூர் (வடபகுதி) காடுகொண்டபள்ளி தி மு கழகத்தின் சார்பில், கழக கட்டடத்தில் ஜூலை 15-ம் நாள் வெற்றி விழா, தோழர் ஆ. ச. மலையப்பன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, இரா இராவணன், சி புட்பராசு, வி. மாசிலாமணி ஆகியோர் சொற்பெருக்காற்றினர்கள்.

★

அக்கிப்பேட்டை

17—7—54 ஞாயிறு காலை கழக மனையில் ஜூலை 15 வெற்றி விழா தோழர் நடேசன் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் சாமி, உலகநாதன். வேந்தன், துரைசாமி, அழகுவேலன் ஆகியோர் பேசினர்.

★

சின்னங்குப்பம் (அரூர் வட்டம்)

ஜூலை 18-ம் தேதி 7 மணிக்கு ஜூலை 15 போராட்ட நினைவு நாள் தீ கிருட்டிணன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் தீ. சண்முகம். க. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

★

மாயூரம்

15—7—54 மாலை 4 மணிக்கு தோழர் காசிநாதன் தலைமையில் நடராசன் வாசகசாலையிலிருந்து ஒரு மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக நகரப் பூங்காவை வந்தடைந்தது.

கவர்னர் சம்பளப் பிரச்னை: கண்ணியர்கள் கருத்துரை

கவர்னருக்கு இப்போது தரப்படும் இலட்சக்கணக்கான ரூபாய் சம்பளம் சரிதானா? அதைக் குறைக்கப் போராட்டம் நடத்த வேண்டுமென்று தி. மு. கழகப் பொதுச் செயலாளர் கூறியது தவறா? என்பது பற்றி வாசகர்களை 'கருத்துரை அளியுங்கள்' என்று கேட்டிருந்தோம். கருத்துரைகள் கொண்ட கடிதங்கள் குவிந்த வண்ணமுள்ளன! அவைகளில் சில நேற்று வெளியிட்டிருந்தோம். தொடர்ந்து இன்றும் வெளியிடுகிறோம்!

★

ஐயா,

பாய்ந்து வரும் "வேலை" தடுக்க வேண்டாமென்றோ, கூரையை பற்றி எரியும் "நெருப்பை" அணைக்க வேண்டாமென்றோ, கடிக்க வரும் "பாம்பை" அடிக்க வேண்டாமென்றோ, சொல்லுவதற்கு ஒப்பாகும் கவர்னர் சம்பளத்தை குறைக்கவேண்டாம் என்று சொல்லுவது—பாய்ந்து வரும் 'வேலை' பற்றிஎரியும் 'நெருப்பை' கடிக்க வரும் 'பாம்பை' எவ்வளவு சீக்கிரம் தடுக்க வேண்டுமோ அதைவிட மிக, மிக அவசரமாக (பொருளாதார நெருக்கடி உள்ள இப்போது) கவர்னர் சம்பளத்தை குறைக்கவேண்டும்.

எஸ். ஆர். பாலகிருஷ்ணன்,
இராசிபுரம்

★

"அண்ணாவின் அறிவுரையை அற்பமாக நினைப்போர்க்கு, அண்ணாவின் கருத்து புரியாததான் ஏனெனில், அவர்களின் நோக்கம் கண்ணீர்த் துளிகளின் கட்சியை கண்ணியமின்றி நினைப்பது தான். நிற்க, கவர்னரின் சம்பளம் ரூபாய் 5,500 மேலும் வீட்டு அலவன்சு, விருந்தினர் அலவன்சு போக்குவரத்து அலவன்சு, பாதுகாப்பு அலவன்சு இத்தனையும் சேர்த்துக் கட்டினால் கிட்டத்தட்ட ரூபாய் 30 000-க்கு மேல் ஆகிறது. ஏழைகளின் இரத்தமாகிய உழவர்களின் உழைப்பாகிய இவ்வளவு பெருந் தொகையை கொடுக்கக்கூடாது. இதை 5,000—மாகக் குறைக்கப்பட வேண்டுமென்று அண்ணா கூறினால், பொருள் தெரியாத புல்லர்கள் புலம்புகின்றனர் அற்பமாக நினைத்து அலறுகின்றனர் ஆகையினால் அறிஞரின் கருத்துக்கு பொருள் தெரியாப் புல்லர்கள் புரிந்துகொண்டு, கவர்னரின் சம்பளக் குறைப்பு போராட்ட மேற்பட்டால் வந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

தி கோ. சிங்காரம்,
திட்டக்குடி.

ஐயா.

கவர்னரின் சம்பளம் குறைக்கப்பட வேண்டும். இல்லையேல் போராட்டம் துவங்கும் என்று அறிஞர் அண்ணா அருமையான ஆதாரங்களை காட்டி பேசியுள்ளார். ஆனால் சிலருள்ள மதியினர் அறிஞரின் பேச்சை கேலிக்கூத்தாக்குகின்றனர். தங்கம் விளையும் இத்தரணி இன்று தரித்திர பூமியாக திகழ்கிறது. பஞ்சமும், வஞ்சமும், லஞ்சமும் கொஞ்சி விளையாடுகிறது. இச்சமயத்தில் தனிப்பட்ட ஒருவருக்கு மாத்திரம் அளவுக்கு மீறிய சம்பளமேன்? கட்டாயம்-கட்டாயம் குறைக்கத்தான் வேண்டும் என்று சிந்தனைத் திறம்மிக்க அனைவரும் செப்புவர்!

மு. வசனப்பித்தன்
மதுரை

★

ஆசிரியர் அவர்களுக்கு.

மக்கள் ஒருவேளை சோற்றுக்கு திண்டாடிக் கொண்டுள்ள நாட்டில், நமக்கு கவர்னராக உள்ளவருக்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான ரூபாய்களை சம்பளமாகக் கொடுப்பதை குறைக்க வேண்டியதே. அதற்காக ஒரு போராட்டம் உடனே தேவை.

அ அப்துல் அலி
பொள்ளாச்சி

★

"ஆடம்பர கோது வேசமையான கவர்னர் பதவி தேவையற்றது. அவசியம் என்று வாதிடினும், பட்டினிச் சாவுகள் நிகழும் இம்மாநிலத்தில், கிட்டின ஓலையில் காட்டிய இடத்தில் கையெழுத்திடும் கவர்னருக்கு ஆண்டுக்கு ரூ 10/- இலட்சம் செலவு செய்வது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும். மேலும் ஆட்சியாளர் இச்செலவினை குறைக்காவிடின் உடன், அறப்போர் ஆரம்பிப்பது அவசியமே."

த இரா, புரட்சிதாசன்,
மா. கா. புதூர், கோவை.

அக்மீது விசாரணை இல்லை

பாக் பிரதமர் அறிவிப்பு

கராச்சி, ஜூலை 26—

கிழக்கு வங்க முன்னாள் முதல் அமைச்சர் பஸ்லுல் அக்மீது வழக்குத் தொடர்ந்து விசாரணை நடத்தப் போவதில்லை என்று பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி கூறினார்.

தனது கடந்த கால செய்கைகளுக்காக வருந்தி அக் விடுத்த அறிக்கைதான் இந்த முடிவிற்குக் காரணம் என்று அவர் மேலும் கூறினார்.

'நான் பஸ்லுல்அக்கை துரோகி என்று அழைத்தது சரியே இப்போது அவர் தனது செய்கைகளுக்காக வருந்துகிறார். அவரது வயது மூதுமையின் காரணமாய் நாங்கள் அவர்மீது வழக்குத் தொடரப் போவது கிடையாது' என்று அலி கூறினார்.

டாக்காவிற்குப் புறப்படுமுன்பாக அலி இச்செய்தியைப் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார். கிழக்கு வங்கத்தில் கவர்னர் ஆட்சி அமுல் செய்யப்பட்ட பின்னர் முகமது அலி இப்போது தான் முதல் தடவையாக டாக்கா செல்கிறார்.

ஸ்டேஷன் மாஸ்டருக்கு சிறைத் தண்டனை

தண்டனையை எதிர்த்து அப்பீல்

அமைந்தா புகைவண்டி நிலைய அதிகாரியாயிருந்த மல்லாடி சூரியநாராயணா என்பவர் லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு மூன்று மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

1952-ம் ஆண்டு ஜூன் 22ந்தேதியன்று ஒரு 'வாகன்' மாம்பழங்களை டாடா நகருக்கு அனுப்புவதற்காக டி. அப்பா ராவ் என்பவரிடம் ரூ 50 லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு இ பி. கோ. 161 சட்டப்படி தண்டிக்கப்பட்டார்.

தனக்குத் தரப்பட்ட தண்டனையை எதிர்த்து ஆந்திர உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்துள்ளாராம். அப்பீலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாம்.

பிரிட்டிஷ் அமைச்சர் இராஜிநாமா

லண்டன், ஜூலை 27—

பிரிட்டிஷ் காலனி இலாகா அமைச்சரான ஆலிவர் லிட்டில்டன் தனது அமைச்சர் பதவியை இராஜிநாமா செய்துவிட்டார் என்று தெரிகிறது.

மாநிலங்கள் ஒழியும்?

மத்திய அரசாங்கம் முழு நிர்வாகப் பொறுப்பேற்கும்!

பாகிஸ்தானின் புதிய அரசியலமைப்பு

கராச்சி, ஜூலை 27—

1935 இந்திய அரசியலமைப்பு திட்டப்படி ஐந்து மாகாணங்களையும் ஒரு மத்திய அரசாங்கத்தையும் கொண்டு நடத்தப்படும் பாகிஸ்தானின் நிர்வாக அமைப்பு, மாகாணங்கள் கலைக்கப்பட்டு, ஒரே மத்திய அரசாங்கத்தின் ஆட்சியின் நிர்வாகத்தில் கொண்டுவரப்படும் என்று தெரிய வருகிறது.

1947-ல் சுதந்திரம் பெற்ற நாள் முதல், பிரிட்டிஷார் கொடுத்துப்போன 1935 இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி மாகாணங்களையும் அதில் தனித் தனி சட்டசபைகள், மந்திரிகள், கவர்னர்கள் முதலியவைகளையும் வைத்துக்கொண்டு, இவைகளுக்கு மேலாக மத்திய அரசாங்கத்தை நிறுவி, ஆட்சி புரியப்பட்டு வரும் பாகிஸ்தானுக்கு புதிய அரசியலமைப்பை தயார் செய்ய கூடியிருக்கும் அரசியல் நிர்ணய சபையின் முக்கியஸ்தர்களில் பெரும்பாலோர் மேற்கண்ட முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்றனராம்.

சென்னை ராஜ்யத்தைப் போல இரு மடங்கு பெரிதான மேற்கு பாகிஸ்தானின் வருமானமோ சென்னை ராஜ்யத்தைவிட மூன்றில் ஒரு பங்கு குறைந்தது. மேற்கு பாகிஸ்தானின் மொத்த வருமானமே சுமார் நாற்பது கோடி ரூபாய்கள்தான். இந்த குறைந்த வருமானத்தை வைத்துக்கொண்டு, மேற்கு பாகிஸ்தான் மூன்று கவர்னர்கள், இரண்டு கவர்னர் — ஜெனரல் பிரதிநிதிகள், எட்டு ராஜாக்கள், எண்பதுக்கு மேற்பட்ட மந்திரிகள் முதலியோரை சமாளிக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பொருளாதாரப் பிரச்னை ஒருபக்கமிருக்க, மாகாணங்களில் வெவ்வேறு கட்சிகளும் தலைவர்களும் உற்பத்தியாக மாகாண சட்டசபைகள் உதவி செய்கின்றன. இப்படிப்பட்ட காரணங்களை உத்தேசித்து, இப்பொழுது கராச்சியில் அதிகாரத்திலிருக்கும் பெரும்பாலான லீக் தலைவர்கள், பாகிஸ்தானில் மாகாணங்களை ஒழித்து, ஒரே அரசாங்கத்தின்கீழ் கொண்டுவரப் பார்க்கின்றனர்.

இது பாகிஸ்தானில் ஏற்பட்டு வரும் மக்களுணர்ச்சியை தகர்த்து, மத்திய சர்க்காரை சர்வாதிகாரத்திற்கு இழுத்துச் செல்லும் என்று முன்னேற்றவாதிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

மேற்கு பாகிஸ்தானைப் பொறுத்தவரை ஒரே அரசாங்கமாக செய்தாலும், கிழக்கு பாகிஸ்தானுக்கு சுயமான தனி சட்டசபையும், அரசாங்கமும் இருந்தே தீரவேண்டும். அது மாத்திரமல்லாமல், நாடு இரு பகுதி எட்டு பாகம் இருக்கிறதே! கிழக்கு பாகிஸ்தானில் பஞ்சாப் ஹக் போன்றோர் இன்னும் அரசியலில் செல்வாக்கோடு இருக்கின்றனர். அவர்களை ஒதுக்கி எதுவும் செய்வது அவ்வளவு சுலபமல்ல. ஆகவே

தான் இந்த அதிமுக்கியமான பிரச்னையில் அபிப்பிராயம் எதுவும் கூறாமல் காலந்தள்ளி, வருகிறாராம், பாக். பிரதமர் முகமதலி.

எப்படியும் விரைவில் இதற்கு ஒரு முடிவு ஏற்படவேண்டும். இல்லையேல் இந்த அபிப்பிராய பேதம் காரணமாக அரசியல் நிர்ணய சபை ஒத்திவைக்கப்படும். அதன் பலன் மேலும் சில ஆண்டுகளுக்கு பாகிஸ்தானின் புதிய அரசியலமைப்பு உருவாகாமற் போகும்.

தி மு க. பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

சுற்றுப் பயணம்

★

29—7—54 : மதுரை
30—7—54 : நாகர்கோயில்
31—7—54 : திருநெல்வேலி
1—8—54 : காரைக்குடி

ஆகிய இடங்கட்குச் சென்று 2—8—54ல் சென்னை திரும்புவார்.

நாகர்கோவிலுக்கு அண்ணாதுரை வருகை

★

30—7—54 மாலை 7 மணிக்கு நாகர்கோவிலில், திரு-கொச்சி நிலை குறித்து ஓர் போதுக் கூட்டம் நடைபெறும். தி.மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர் கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசுவர்.

அறிவு வளர்ச்சி புதிய......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வசிப்பவர்கள், வணக்காரர்கள் பிரபுக்கள் எல்லோருமே எதிர்த்தார்கள். இன்று அந்தக் கருத்துக்களுக்குக் கிடைக்கிற வரவேற்பும் ஆரவாரமும் அன்று கிடையாது. மாறாக, பொழிகிற கல் மழையில் நனைந்துக் கொண்டே, வீசி எறிகிற செருப்புக்களைத் தாங்கிக்கொண்டேதான் அக்கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்கிற நிலை இருந்தது. அந்நிலை அறிவின் தூதுவர்களை, புத்துலகத்தை நிர்மாணிக்கும் சிற்பிகளை எதிர்த்து அழித்து விட நினைத்தது. பல எதிர்ப்புச் சூறாவளிக்கு இடையில் தான் அண்ணன் பொன்னம்பலனார் போன்றவர்கள் அறிவுப் பணி புரிந்தனர்.

அன்று அவர்கள் செய்த தியாகத்தின் பலன்தான், கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக் கொண்டதின் விளைவுதான் இன்று மக்கள் விழிப்புணர்வு பெற்றிருக்கிறார்கள்.

அன்று, அறிவுப்படையின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. எதிர்ப்பவர் எண்ணிக்கை மிக அதிகம். இன்று அறிவுப் படையினர் தொகை மிக அதிகம் எதிர்ப்பவர் எண்ணிக்கை மிகக் குறைவு.

இப்படிப் பழமைக்கும் புதுமைக்கும் நடைபெற்ற போரில் நாம் எப்படி வெற்றி பெற்றோம்? நமக்கு சுயநலமில்லை. அறிவுப்பணியை நாட்டுப் பணியென எண்ணி எத்தகு கஷ்டங்களையும் ஏற்றுக்கொள்ளும் திடமனதுடன் பணி புரிந்தோம். இன்று யாராவது நமது பணி வீணாகிவிட்டது என்று கூறிவிட முடியாது.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இன்று மக்கள் சுகமான வாழ்வு பெற்றிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்கள் அறிவால் மேம்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெற்றுள்ள அறிவு வளர்ச்சி நமக்கு இல்லாமற் போனதால் நாட்டு அவர்களைக் காட்டிலும் குறைந்த அளவுதான் வாழ்வில் சுகம் இருக்கிறது. நம்மைக் காட்டிலும் இருண்ட அடர்ந்த காடுகளின் நடுவே ஆப்பிரிக்காவில் வாழும் மக்கள் குறைந்த அளவு வளர்ச்சியைப் பெற்றிருப்பதால் நம்மைவிட சுகக்கேடான வாழ்வு நடத்துகிறார்கள்.

அறிவு வளர்ச்சியில்தான் ஒரு நாட்டின் வாழ்வு தேங்கிக் கிடக்கிறது என்ற ஒரு பொது உண்மையை உலக வரலாறு நமக்குச் சொல்கிறது.

இன்று, நான் உங்களிடையே பேசிக்கொண்டிருக்கிற பொருள் 500 ஆண்டுகளுக்கு முன்பாகவே இங்கிலாந்தில் கேவலப்படாத ஒன்றாகிவிட்டிருக்கிறது. நாம் செய்யும் இந்த அறிவுப் பணியை, நம்மைவிடக் கொடுமையான பரிசுகளைப் பெற்றுக் கொண்டுதான் அந்த நாட்டில் அறிவின் தூதுவர்கள் செய்திருக்கிறார்கள்.

அன்று தீரத்தோடும், அணிவேரோடும் அந்த நாட்டில் மலர் புரிந்த அறிவுப் பணியின் பலனைத்தான் இன்று அந்த நாட்டு மக்கள் அனுபவித்து வருகிறார்கள். அந்த நாட்டினர் மட்டுமல்ல அந்தப் பலனை அனுபவிப்பது. பிற நாட்டாரும் கூடத்தான்.

நாம்கூட எல்லாத் துறைகளிலும் அந்த மேல் நாட்டவரைப்போல் 'காப்பி' அடிக்கவில்லையா என்ன?

நாம் அன்றாட வாழ்வுக்கு உபயோகிக்கும் அத்தனை அத்தியாவசியப் பொருள்களும் அந்த நாட்டவரின் அறிவு வளர்ச்சியின் பலன்தானே.

வசதிகளோடு வாழ்வதில் மட்டுமா நாம் 'காப்பி' அடிக்கிறோம். அவர்களைப் போலவே அரசியல் அமைத்துக் கொள்ளவும் ஆசைப்படுகிறோம். அவர்கள் கண்ட மிகச் சிறந்த அரசியல் தத்துவங்களையும் நாம் காப்பி அடிக்கிறோமே! இன்றைய நிலையில் இந்த நாட்டில் நிலவுகிற ஜனநாயக அரசு முறைதான் தத்துவங்களைக் கண்டவர்களே மேலை நாட்டவர் தானே! மேலும் மார்க்ஸ், லாஸ்கி போன்ற பெரும் மேதைகளின் தத்துவங்களும் நமது அரசியலை ஊடுருவிச் செல்கின்றனவே, இந்த ஜனநாயக அரசு முறை என்ன, இன்று ஆச்சாரியார் பிடித்துக் கொண்டிருக்கும் ராமாயணத்தில் இருந்தோ, பகவத் கீதையிலிருந்தோ எடுக்கப்பட்டது அல்லவே!

ஒரு காலத்தில் உலகெங்கணும் மன்னர்களின் ஆட்சி இருந்தது. ஆனால் இன்று அந்த மன்னர்கள் எல்லாம் ஆள்வதுவேயாய் ஆட்சிபீடத்திலே அமர்வதற்கு, ஆளப்படுகிற மக்களின் அதிகாரமும் அனுமதியும் தேவை என்ற புதிய ஜனநாயகத் தத்துவம் தானே உலகெங்கணும் விரும்பி வரவேற்கப்பட்டுள்ளது. மனித வாழ்க்கைக்கு அறிவு வளர்ச்சியினால் ஏற்பட்ட இத்தகு புதிய முறைகள், ஏற்பாடுகள் தேவை என்பதை உணருகிறோம். காப்பி அடித்துக் கொள்கிறோம். அவைகளின் பலனைச் சுவைக்கிறோம் சுகம் காண்கிறோம்.

150 ஆண்டுகட்கு முன் வரை இருந்த மன்னர் ஆட்சி முறை இன்று இல்லையே ஏன்? இன்று ஜனநாயக அரசு முறைகளைத்தான் மக்கள் அமைத்துக் கொள்ளத் துடிக்கிறார்கள் ஏன்.

அந்த ஜனநாயக அரசு முறையில் தங்களுக்கு அடிப்படை உரிமைகள் தேவை என்று கோருகிறார்கள், ஏன்?

மோட்டாரை எடுத்துக் கொள்ளுங்கள். 1920-ல் இருந்த மோட்டாருக்கும் 1930-ல் இருந்த மோட்டாருக்கும் பெரும் வேறுபாடு உண்டு. 1930-ல் இருந்ததற்கும் இன்றிருக்கும் மோட்டாருக்கும் அடையாளமே தெரியாத மாற்றமும் முன்னேற்றமும் இருக்கிறதைப் பார்க்கிறோம். இது எதைக் காட்டுகிறது. முறைகள் மாற மாற மனிதனின் அறிவு வளர்கிறது என்பதைக் காட்டவில்லையா? மனிதனின் அறிவு வளர வளர, முறைகள் மாறுகின்றன என்பதைக் காட்டவில்லையா?

உலக அரங்கில்

ஹனோய் :

வியட்மின் ஆதரவாளர்கள், ஹனோய், ஹைப்போங் ஆகிய பகுதிகளில் உள்ள வியட்நாம் தேசிய படையினரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர் என்று பிரெஞ்சு இராணுவ காரியாலயம் அறிவித்தது.

நியூயார்க் :

ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் சமாதான உடன்படிக்கை உருவாக முயன்ற உறுப்பினரான பி. என். ராவின் சேவைகளைப் பாராட்டிப் பேசப்பட்டது.

லண்டன் :

ஜினிவா மாநாட்டை முடித்துக்கொண்டு சீனப் பிரதமர் சூ-என்-லாய் பீகிங் திரும்பும் வழியில் மாஸ்கோ வந்து சேர்ந்திருக்கிறார்.

• • •

ஆங்கிலோ—எகிப்திய உடன்பாட்டை பிரிட்டிஷ் மக்கள் பாராட்டுகின்றனராம். எழுபது ஆண்டு பிரச்சினையான சூயஸ் பிரச்சினை இவ்வளவு சுமுகமாகத் தீர்ந்தது பற்றி அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

* * *

பிரிட்டனும், சவூதி, அரேபியாவும் புரைமி எல்லைப் பிரச்சினையை சமரசத்திற்குவிட ஒப்புக் கொண்டிருக்கின்றன.

கான்பெரா :

ஆஸ்திரேலியப் பிரதமர் ஆர். ஜி மென்சிஸ் தென் கிழக்கு ஆசியப் பிரச்சினைகள் பற்றி விவாதிக்க வாஷிங்டன் செல்லப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார். ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் அவரை வாஷிங்டன் செல்லுமாறு வற்புறுத்தியதின் பேரில்தான் மென்சிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

வாஷிங்டன் :

இருபது லட்சம் ஆசியக் குழுக்கள் அமெரிக்க உதவியுடன் கம்யூனிஸ்டு சீனாவின் தாக்குதலைச் சமாளிக்க எதிர்த் தாக்குதல் நடத்தவேண்டுமென்று தென் கொரிய அதிபர் சிங்மன் ரீ அறிவித்துள்ளார்.

* * *

சீன சர்க்காரால் சுடப்பட்ட பிரிட்டிஷ் விமானத்தி லிருந்தோரை ஹைனான் தீவைச் சுற்றி அமெரிக்க கப்பற் படை விமானங்கள் தேடுகின்றன.

கெய்ரோ :

சூயஸ் பிரச்சினைகளைத் தீர்த்ததின் மூலம் பிரிட்டனுக்கு மத்திய கிழக்கில் அருமையான தோர் நண்பன் கிடைத்திருக்கிறான். கடந்த இரண்டு ஆண்டுகளாக பிரிட்டனைத் தாக்கிப்பேசியவன் இனி பிரிட்டனின் சிறந்த நண்பனாக இருப்பேன் என்று எகிப்து அமைச்சர் மேஜர் சலீம் கூறியுள்ளார்.

* * *

சூடானின் தண்ணீர் பிரச்சினைகளைச் சமாளிக்க சூடான் சர்க்கார் ஐ. நா. உதவியைக் கேட்குமென்று சூடான் பிரதமர் இஸ்மெயில் அஸ்காரி கூறியுள்ளார்.

ஒட்டாவா :

இந்தோ சீனப் போர் நிறுத்தக் கமிஷனில் உறுப்பினராக இருக்க கனடா ஒப்புக் கொண்டுவிட்டது.

வியன்னா :

ஆஸ்திரிய போலீசார் ஒருவரை ஆம்ஸ்டெட்டன் நகரில் ரஷ்ய உடையில் இருந்த இருவர் சுட்டுக் கொன்றனர் என்று தெரிகிறது. ஒரு பீர் கடை அருகே இச்சம்பவம் நடைபெற்றதாம்.

சொற் பயிற்சிக் கூட்டம்

30—7—54 மாலை 6 மணிக்கு வடசென்னை தியாகராயர் பகுத்தறிவு மன்றச் சார்பில் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். 'எதிர்காலம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் செ. பிரியாதுரை, சி. ஆர். பாலசுந்தரம், ராஜேந்திரன் ஆகியோர் பேசுவர்.

இடைவிடா சைக்கிள் சவாரி!

திருக்கோட்டியூர் டாக்டர் சிவராயம் அவர்களின் புதல்வர் தோழர் என். தெட்சிணாமூர்த்தி 120 அடி சுற்றளவுள்ள இடத்தில் ஜூலை 12-ம் தேதி காலையிலிருந்து 15-ம் தேதி காலை 10 மணி வரை இறங்காது (72 மணி நேரம்) சைக்கிள் ஓட்டினார். குளித்தல், உணவுண்ணல், உடை மாற்றுதல் எல்லாம் சைக்கிளில் இருந்தபடியே செய்து கொண்டார். அன்னவருக்கு ஊரார் சார்பாகவும் மற்ற தோழமைக் குழுவினரின் சார்பாகவும் மலர் மாலைகளும் வெள்ளிக் கோப்பைகளும் பரிசாக அளிக்கப்பட்டன (சரி)

அனுதாபம்

சென்னை, ஜூலை 29 —

தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களின் ஒரே மகனான தோழர் அருணாசலம் மறைவு குறித்து, ஆழ்ந்த வருத்தத்தை 'நம் நாடு' ஆசிரியர் தோழர்களும், பொதுப்பணியாளர் அ. பொன்னம்பலனார் அவர்களும், சென்னை மாவட்ட திமுகழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களும் அனுதாபத்தைத் தந்தி மூலம் அறிவித்துள்ளனர்.

சென்னை முன்னேற்றக் கழகச் அச்சகம் தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (86, ஆதிப்ப நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.